1974 மார்ச் 4]

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அதற்கான "லேண்ட் அக்வி சிஷன்" முடிந்துவிட்டதா ? எவ்வளவு அதிக நிலம் தேவைப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேம்பாட்டுப் பணிகளை நிறை வேற்றுவதற்கான முன்னுரிமைப் பட்டியலில் மதுரை விமான நிலையம் இருப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த நிபுணர்கள் மதுரைக்கு வந்த சமயத்தில் அது ஒரு முக்கியமான விமான நிலையமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் சொன்ன மாதிரி மதுரை விமான நிலையத்தில் இன்னும் ஒரு மாதத்தில் வந்து இறங்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் கூறிய பதிலில் 1974-ம் ஆண்டு கடைசியிலோ அல்லது 1975-ஆம் ஆண்டின் ஆரம்பத்திலோ வரும் என்று இந்திய அரசு இவ்வரசுக்குத் தெரிவித் துள்ளது என்று தெரிவித்திருக்கிறேன்.

Handloom Export Corporation.

*283 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal to set up a Handloom Export Corporation in the State to facilitate the export of handloom clothes to other States and countries ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு செ மாதவன்

(அ) ஆம்.

(இ) விவரங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : சார், தனிப்பட்ட வியாபாரிகள் வெளி நாடுகளுக்குத் தரக் குறைவான துணிகளை அனுப்புவதால் வெளிநாடுகளில் நம்முடைய துணிகளுக்குக் கிராக்கி குறைந்திருக்கிறது. ஆகவே, சர்க்காரே பணம் ஒதுக்கி நல்ல தரமான துணிகளை, நல்ல டிசைன்களை அனுப்பு வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதே சமயத்தில் மெட்ராஸ் ஹேண்ட் கர்சிப் தென் ஆப்பிரிக்காவுக்குக் குறைவாக அனுப்பப்படுவதால் இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. அதையும் சேர்த்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் தான் முடிவெடுக்க வேண்டும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநில அரசே அப்படிப்பட்ட உற்பத்தி யாளர்களுக்கு உதவி செய்து அதிக ஏற்றுமதி செய்யவும், நம்முடைய மாநில சங்கங்களில் உற்பத்தியாவதை ஏற்றுமதி செய்யவும் முடிவெடுக்க லாம் என்ற பரிசீலனை இருப்பதாகத்தான் சொன்னேன்.

திரு. சௌடி சுந்தர பாரதி : தலைவரவர்களே, இந்த கைத்தறித் தொழிலில் ஏற்றுமதிக்கென்று ஒரு கழகம், உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருட்களைத் தயாரித்துக் கொடுப்பதற்கு என்று ஒரு கழகம் என்பதாகத் தனித்தனியாக இல்லாமல் கைத்தறித் தொழிலுக்கு என்று ஒரு வாரியமாக அமைத்து அதன் மூலம் மூலப் பொருட்கள் நியாய விலையில் நிறையக் கிடைக்கவும், அதைப்போல் விற்பனைக்கும் ஏற்றுமதிக்கும் என்றும் ஒட்டுமொத்தமாக கைத்தறிக் கழகத்தை அமைப்பது பற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு இயக்கத்திற்குத் தனியாக ஒரு அமைப்பு இருக்கிறது. நாம் இப்பொழுது எடுக்கும் முயற்சி, கூட்டு றவுத் துறை, கூட்டுறவு அல்லாத துறையிலிருந்து அதிக அளவிற்கு நம் மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்ய ஊக்கம் தரும் முயற்சிதான் இந்த முயற்சி.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்தத் துணிகளை ஒப்பந்தக்காரர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்பொழுது தரக் குறைவான துணிகளை ஏற்றுமதி செய்வதால் பிறகு ஆர்டர் கிடைப்பது சிரமம் ஏற்படுகிறது. பாதிக்கப்படுகிறது என்று பொதுவாக நம்பப்படு கிறது. ஆகவே, நம்முடைய மாநில அரசாவது தரக் கண்ட்ரோல் செய் வதற்கு அதிகாரிகளை நியமித்து அந்த அதிகாரியிடமிருந்து தரத்திற்கான சர்டிபிகேட் பெற்றுத்தான் வெளி நாடுகளுக்கு அனுப்ப வேண்டுமென்று ஏற்படுத்தினால் அந்தத் தரம் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கும். அதனால் கைத்தறி அபிவிருத்தியடையும். அதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது நாம் ஏற்படுத்த உத்தேசித்துள்ள இந்த வாரியம் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே இருந்து பல கோடி ரூபாய்களுக்கு 1973ஆம் ஆண்டில் கைத்தறித் துணி ஏற்றுமதியாகியிருப்பதாக சில நாட்களுக்கு முன்பு பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஆகவே, அதை ஊக்குவிக்கும் முறையிலே அந்த தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சிறப்பான கடன் உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே ஏராளமான கடன் உதவிகள் செய்யப்படுகிறது. ஏற்றுமதிக்கு தனிச் சலுகை கொடுத்து வருகிறோம். இன்னும் அதிகப்படுத்த என்ன முயற்சிக்கலாம் என்பதற் காகத தான் புது வாரியம்.

1974 மார்ச் 4]

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், ஏற்கெனவே, மத்திய சர்க்காரின் "ஹேண்ட்லூம் எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்" சென்னையிலே இருக்கிறதே, ஆகவே, நீங்கள் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படியொரு எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதைப்பற்றிச் சொன்னால் பரிசீலிக்கலாம். இப்பொழுது இருப்பது "எக்ஸ்போர்ட் ப்ரொமோஷன் கவுன்சில்". அவர்கள் இங்கேயிருந்து ஏற்றுமதி செய்வதற்கு என்னென்ன புதிய முயற்சிகளை எடுக்கலாம் என்று பரிசீலித்துச் சொல்லுகிறார்கள். நாம் எடுக்கும் முயற்சி, அங்கத்தினர் கூறியதைப் போல் நம்முடைய தமிழ் நாட்டிலே சரக்குகளை சிலர் தவறான முறையிலே ஏற்பாடு செய்வதால் நம்முடைய சரக்குகளுக்கு இடமில்லாத நிலை ஏற்படுகிறது. நானே ஒரு நாட்டிலே பார்த்தேன், கேட்ட ஆர்டருக்கும் வந்த சரக்குக்கும் சம்பந்தமே இல்லை என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நம்முடைய மாநில சங்கத்தின் மூலம் அனுப்பினோம். அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆகவே, ஏற்றுமதி செய்யும்பொழுது, மற்ற தனியார் ஏற்றுமதியில் தவறு நிகழாமல் இருப்பதற்காக இம் முயற்சிகள் பரிசீலிக்கப்படுகின்றன.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவரவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேயிருந்து தான் கைத்தறித் துணிகள், கைத்தறி சட்டைகள் இன்றைக்கு ஏராளமாக ஏற்றுமதியாகிறது. அந்த ஏற்றுமதியின் தரத்தைக் கவனிப்பதற்கு மத்திய சர்க்காரிலிருந்து நியமிக்கப்பட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களால் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அரசு இங்குள்ள எல்லா ஏற்றுமதியாளர்களையும் அழைத்து அவர்களோடு பிரச்சினையை வாதிட்டு இன்னும் ஏற்றுமதிக்கு அதிக ஊக்கம் அளிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த முயற்சிக்காகத் தான் அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி இப்படிப்பட்ட ஒரு புது ஏற்பாட்டைச் செய்தால் ஊக்கம் தரலாம் என்ற எண்ணம் அரசினிடத்தில் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : ஏற்றுமதிக் கழகம் நம்முடைய மாநிலத்திலுள்ள கூட்டுறவு, கூட்டுறவு அல்லாத துறையில் இருப்பவர்களுடைய தறிகளில் எது எது ஏற்றுமதிக்குத் தகுதியானது, எந்தெந்த ரகங்கள் தகுதியானது என்பதை வரையறுத்து அந்த ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அந்த மாதிரிக் காரியங்கள் செய்யப்படுகிறபோது அந்தக் கழகத்திலே மாஸ்டர் வீவர்கள், கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்கள், மற்றும் வியாபாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரங்கள் எல்லாம் பரிசீலிக்கப்படுவதாகச் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : எக்ஸ்போர்ட் ப்ரொமோஷன் கவுன்சில் ஆண்டுக்கு ஒரு முறை தயார் செய்கிற அறிக்கையைப் பார்க்கும்போது ஜப்பானுக்கு ஏற்றுமதி ஆன சரக்குகளை மாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். மூலக் கேள்வியிலுள்ள முதல்

கேள்விக்கான பதிலில் கூட "மெட்ராஸ் ஹாண்ட் கர்சீப்" ஏற்றுமதி பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அது கைக்குட்டை அல்ல; அது பெண்கள் அதிகமாக உபயோகப்படுத்தக்கூடிய படுதா மாதிரியான வேட்டி. ஆப்பிரிக்க நாடுகளில் அதிகமாக உபயோகப்படுத்தி வந்தார்கள். அதற்கு டிமாண்ட் இருக்கிறதா? மத்தியக் கிழக்கு நாடுகளுக்கும், ஆப்பிரிக்க நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறதா? இல்லையென்றால் என்ன காரணம்?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்:</u> மெட்ராஸ் ஹாண்ட் கர்சிபுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இது பற்றிய விவரங்கள் இல்லை.

Copper deposits in Tiruvannamalai area

*284 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether it is a fact that the Bharat Gold Mines are undertaking any exploratory mining for Copper finds near Tiruvannamalai in this State; and

(*b*) if so, the details thereof?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்:</u> இந்திய அரசின் நிறுவனமாகிய பாரத் தங்கச் சுரங்கம் (வரையறுக்கப் பெற்றது) தென்னாற்காடு மாவட்டத்தில் கிடைக்கும் தாமிர கனிப் பொருட்களைக் கண்டுபிடித்து ஆய்வு நடத்த உத்தேசித்துள்ளது. மேற்கண்ட கனிப் பொருட்களின் மாதிரிகள் சேகரித்து, அவற்றை இலாபகரமான முறையில் வெட்டி எடுக்கும் சாத்தியக் கூறுகளையும் அவற்றை மேம்பாடடையச் செய்ய ஆய்வு நடத்துதலும் இந்த ஆய்வு வேலையுள் அடங்கும். இச் சுரங்கத்தின் அபிவிருத்தி இந்த ஆய்வு வேலைகளின் முடிவைப் பொறுத்து அமையும்.

<u>திரு. எஸ். டென்னிஸ்:</u> அந்த ஆய்வு வேலை எப்போது முடிவடையும்?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்:</u> மத்திய அரசாங்கத்தின் நிறுவனம் விரைவில் செய்யும் என்று நம்புகிறேன்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்:</u> இந்தப் படிவம் எவ்வளவு இருக்கிறது? ஒரு தொழிலுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்கேற்றவாறு சாத்தியக் கூறு இருக்கிறதா?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்:</u> தொழிலைத் தொடங்க வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்கும்படி மத்திய அரசு நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தப் படிவம் கிடைக்குமென்று எதிர்பார்ப்பது ஒன்றரை மிலியன் டன்கள் ஆகும்.